வருகிறார்கள். துணி துவைக்க, கழுதைகள் மேய்க்க, அந்த இடங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களை அப்புறப்படுத்துகின்ற உத்தேசம் எதுவும் இப்போது அரசிற்கு இல்லை அந்த இடம் குளமாக இருக்கிறது. பட்டா செய்து தருவதில் பிரச்சினை இருக்கிறது. எனவே பொதுப்பணித் துறை அதிகாரிகளை கலந்து கொண்டு அவர்களுக்கு செய்து கொடுக்கலாமா என்பதை இந்த அரசு ஆலோசிக்கும்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. வரவு-செலவுத் திட்டம், 1984-85 பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கருத்தை வைத்திட விரும்புகிறேன்.

நாவலர் அவர்கள் ரூ. 2,000 கோடி சொச்சத்திற்கு வருவாய்க் கணக்கு காட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு அவர் சப்மிட் பண்ண பட்ஜெட்டில் கிட்டத்தட்ட ரூ. 57 கோடிக்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்படி உள்ள ஒரு பட்ஜெட்டை வயிற்றில் பால் வார்த்த மாதிரி என்றும், இது மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டி என்றெல்லாம் இந்த மாமன்றத்திலே பேசப்பட்டது. ஆனால் நான் மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS